(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 85.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 செப்தெம்பர் 25, வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

கௌரவ **ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க குணசேகர,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) பிரசன்ன குணசேன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

கௌரவ **எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

கௌரவ **மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

கௌரவ **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

கௌரவ **ரீ. பீ. சரத்,** வீடமைப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

கௌரவ **அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன**

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ கே.இளங்குமரன்

கௌரவ அர்கம் இல்யாஸ்

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திராணி கிரிஎல்லே

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ சமிந்த லலித் குமார

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ கயான் ஜனக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ நிசான்த ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ (டாக்டர்) செல்லத்தம்பி திலகநாதன்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ அமில பிரசாத்

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ நந்த பண்டார

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மனோஜ் ராஜபக்ஷ்

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்ஹ

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ ஜகத் விதான

**கௌரவ அதுல வெலதகொட**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ பஸ்மின் சரீப்**

**கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியைச் சபாநாயகர் வாசித்தார்:—

M. No. 85

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/7/IX/3/01

2025 செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி

**கௌரவ ஜ.டபிள்யு.எம். ஜகத் விக்கிரமரத்ன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

அநுர குமார திசாநாயக்க
சனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

"பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர அவர்களுக்கு எதிராக கௌரவ பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 32 பேர் அடங்கிய குழுவினால் 2025.08.12 அன்று சமர்ப்பிக்கப்பட்ட 'நம்பிக்கையில்லாப் பிரேரணை' எனத் தலைப்பிடப்பட்ட பிரேரணை தொடர்பாக 2025.09.08 அன்று நான் வழங்கிய அறிவித்தலின் தொடர்ச்சியாக நான் இந்த அறிவித்தலை விடுக்க விரும்புகின்றேன்.

பாராளுமன்றத்தில் ஒழுங்கிற்கான விதிகளை அனுஷ்டிப்பதற்குப் பாராளுமன்ற சபாநாயகரே பொறுப்பாவார் என்றும் எந்தவொரு ஒழுங்குப் பிரச்சினை தொடர்பான அவரின் தீர்மானமும் மேன்முறையீட்டுக்கு உரியதல்ல என்றும் அவை அறிவித்தலின் பின்னரான ஒரு தன்னிலையான பிரேரணையினாலன்றிப் பாராளுமன்றத்தினால் மீளாய்வு செய்யப்படலாகாது என்றும் குறிப்பிடும் நிலையியற் கட்டளை 76(1) இனை நான் ஆரம்பத்திலேயே இச்சபைக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

எவ்வாறாயினும், பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட விசாரணைகளைக் கருத்திற்கொண்டு, குறிப்பிட்ட பிரேரணை விதிமுறைக்கு முரணானது எனத் தீர்ப்பு வழங்கியமைக்காக முன்னைய அறிவித்தலில் கோடிட்டுக்காட்டப்பட்ட காரணிகளை நான் மேலும் ஆதாரப்படுத்த விரும்புகின்றேன்.

1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளும் தனிப்பட்ட அமைச்சரவை அமைச்சர் ஒருவருக்கு எதிராக, பிரதியமைச்சர் ஒருவருக்கு எதிராக அல்லது வேறு எந்தப் பதவிகளையும் வகிப்பவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றினைப் பிரேரிப்பது தொடர்பில் எதையும் குறிப்பிடாதிருக்கின்றன. நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக இருக்கின்ற ஒரே ஏற்பாடு அரசியலமைப்பின் 49(2) எனும் உறுப்புரையாகும். இது அரசாங்கம் ஒன்றுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றினைப் பிரேரிப்பதற்கான ஏற்பாட்டினை மாத்திரமே வழங்குகின்றது.

எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்டவாறு அரசியலமைப்பிலும் நிலையியற் கட்டளைகளிலும் நம்பிக்கையில்லாப் பிரேரணையினைப் பிரேரிப்பது தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படாதிருப்பதையும் தாண்டிப் பிரதம அமைச்சருக்கு எதிராகவும் தனிப்பட்ட அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் பிரேரிக்கப்பட்டுள்ளமை இவ்வாறான முன்னுதாரணத்திற்கான சட்ட அடிப்படையினைக் கேள்விக்குட்படுத்துகின்றது.

பாராளுமன்றச் சூழமைவில், சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், அரசாங்கக் கட்சி முதற்கோலாசான், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் எதிர்க்கட்சி முதற்கோலாசான் ஆகியோர் பாராளுமன்ற நிர்வாக உறுப்பினர்களாகக் கருதப்படுகின்றனர் என்பதும் இவ்வகையான ஒரு தன்னிலையான பிரேரணை அவர்களுக்கு எதிராகப் பொருத்தமான முறையில் கொண்டுவரப்படலாம் என்பதும் கருத்திற் கொள்ளப்படுகின்றது.

சர்வதேசச் சூழமைவில், அரசாங்கம் தொடர்பாகவும் அல்லது ஒட்டுமொத்த அமைச்சரவை தொடர்பாகவும் மாத்திரமே நம்பிக்கையில்லாப் பிரேரணை அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன் (Erskine May, 'Treatise on the Law, Privileges, Proceedings and Usage of Parliament', 25th Ed. and M.N. Kaul and S.L. Shakdher, 'Practice and Procedure of Parliament', 8th Ed.). மேலும், அமைச்சரவையானது லோக்சபாவுக்குக் கொண்டுள்ள கூட்டுப் பொறுப்பின் பிரகாரம் இந்திய அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நம்பிக்கையில்லாப் பிரேரணையானது ஒட்டுமொத்த அமைச்சரவைக்கும் எதிராக மாத்திரமே பிரேரிக்கப்படலாம் என்றும் எந்தவொரு தனிப்பட்ட ஓர் உறுப்பினருக்கும் எதிராகப் பிரேரிக்கப்பட முடியாதென்றும் எம். என். கௌல் மற்றும் எஸ். எல். சக்தெர் ஆகியோர் கோடிட்டுக்காட்டுகின்றனர்.

இதேபோன்று, இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரைகள் 42, 43 மற்றும் 44 ஆகியவை அமைச்சரவையின் கூட்டு அமைச்சரவைப் பொறுப்புக்கான மற்றும் தனிப்பட்ட அமைச்சரவைப் பொறுப்புக்கான ஏற்பாடுகளை வழங்குகின்றன.

தற்போது இலங்கையில், அமைச்சரவை அமைச்சர்களுக்கு உதவுவதற்காக அரசியலமைப்பின் 46(1) எனும் உறுப்புரையின் கீழ் பிரதியமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர். எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 46(2) எனும் உறுப்புரையின் கீழ் செயற்படும் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் எந்த விடயம் தொடர்பான அல்லது செயற்பாடு தொடர்பான எந்த அதிகாரத்தினையும் அல்லது கடமையினையும் பிரதியமைச்சர்களுக்குப் பிரித்து வழங்கவில்லை. அரசியலமைப்பின் 74 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் அரசியலமைப்பின் 46(1) எனும் உறுப்புரைக்கு அமைவாக, பிரதியமைச்சர்கள் நிலையியற் கட்டளை 32(2) இற்கு அமைவாக அமைச்சர்களின் சார்பில் செயற்படுகின்றனர் என்பதை நான் இங்கே உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மேற்குறிப்பிட்ட காரணங்களின் நிமித்தம், இந்தப் பிரேரணையானது நிலையியற் கட்டளை 27(3) இன் பிரகாரம் விதிமுறைக்கு முரணானது என நான் தீர்ப்பளிக்கின்றேன்.

மாற்றாக, பாராளுமன்ற உறுப்பினர்களின் அல்லது குறிப்பாகச் சபாநாயகர் உள்ளடங்கலாகப் பொதுமக்கள் சபையின் பதவிகளை வகிக்கும் உறுப்பினர்களின் நடத்தை தொடர்பான இடைநேர்விளைவான விமர்சனங்கள் ஒரு தன்னிலையான பிரேரணையின் மூலம் மாத்திரமே அனுமதிக்கப்படுகின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன் (Erskine May, ‘Treatise on the Law, Privileges, Proceedings and Usage of Parliament’, 25th Ed.), மேலும், ஐக்கிய இராச்சியத்தில், அரசாங்கத்தின் கொள்கையினை விமர்சித்து அல்லது ஓர் அமைச்சரை விமர்சித்துக் கண்டனப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படலாம் என்பதை நடைமுறைகள் உறுதிப்படுத்துகின்றன. அமைச்சரவை அல்லது தனிப்பட்ட அமைச்சர் அல்லது அமைச்சர்கள் குழு செயற்படத் தவறியமைக்கு எதிராக அல்லது செயற்படாமைக்கு எதிராக அல்லது அவர்களின் கொள்கைக்கு எதிராகக் கண்டனப் பிரேரணைகள் கொண்டுவரப்படலாம் என்றும் அமைச்சர் அல்லது அமைச்சர்களின் செயலின்மை தொடர்பில் சபையின் மனவருத்தத்தினை, கோபத்தினை அல்லது ஆச்சரியத்தினை வெளிப்படுத்தலாம் என்றும் எம். என். கௌல் மற்றும் எஸ். எல். சக்தெர் ஆகியோர் குறிப்பிடுகின்றனர் (‘Practice and Procedure of Parliament’, 8th Ed.).

இதன் பிரகாரம், குறிப்பிட்ட பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விடயங்களின் தேசிய முக்கியத்துவம் காரணமாகவும் அப்பிரேரணையில் உள்ள சில குறிப்பிட்ட விடயங்கள் நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளுடன் நேரடியான தொடர்பினைக் கொண்டிருக்கவில்லை எனச் சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயம் தெரிவித்துள்ளமையினாலும், சர்ச்சைக்குரிய இப்பிரேரணைக்கு பதிலாக ஒரு தன்னிலையான பிரேரணையினைச் சமர்ப்பிப்பதற்கான சாத்தியத்தினை ஆராயுமாறு நான் இச்சபைக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.”

**3. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான வவுனியாப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2025.08.01 முதல் 2025.08.31 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத்

திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் அபிவிருத்திச் செயற்பாடுகள் நிகழ்ச்சித்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பினைச் சமர்ப்பித்தார்.

மேற்படி ஆவணம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டினைச் சமர்ப்பித்து, அக்குறைநிரப்பு மதிப்பீடு அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆவது பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) பேராதெனிய, தொடம்வலபிட்டிய, இல. 72/ஈ யில் வதியும் திரு. ரி.பீ.ஏ.சீ. குலதுங்கவினது 2025.03.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே சமர்ப்பித்தார்.

(2) நல்லதரன்கட்டுவ, ஹெலம்பவட்டவன, இல.131/1 இல் வதியும் திரு. எஸ்.ஏ.எம். ரஞ்ஜித் சூரியஹெட்டியினது 2025.04.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் கிஹான் சமர்ப்பித்தார்.

(3) (i) கம்பஹா, முதுன்கொட, மெதவத்த, இல. 1/30 இல் வதியும் திருமதி ஏ.ஏ. ரஞ்ஜனீ மென்டிஸினது 2025.05.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) இரத்தினபுரி, கொழும்பு வீதி, இல. 269/1 சீ யில் வதியும் திருமதி பீ. ஞானவதியினது 2025.05.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) பெலிஹுல்ஓய, பம்பஹின்ன, சமனல மாவத்தை எனும் முகவரியில் வதியும் திருமதி பீ.ஆர். பொடிமெனிக்கேயினது 2025.05.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) மீரிகம, நாவான, கெசெல்கொட்டுவ வத்த, இல. 38/2 இல் வதியும் திருமதி ஐ.கே. மாலனி விஜேரத்னவினது 2025.06.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) லோலுவாகொட, அமரகிரி வத்த, இல. 1/167 இல் வதியும் திருமதி பி.ஏ.வீ.டப்ளியூ. தயானி குமாரியினது 2025.06.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(vi) வேயன்கொட, மாளிகாதென்ன, இல. 96/2/2 இல் வதியும் திருமதி எஸ்.ஆர்.எம்.ஏ. லீலாவதி சமரதிவாகரவினது 2025.05.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து சமர்ப்பித்தார்.

(4) பிட்டபெத்தர, புளுவன, சமர நிவச எனும் முகவரியில் வதியும் திரு. எச்.ஜி. ஆரிவங்சவினது 2025.06.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லால் பிரேமநாத் சமர்ப்பித்தார்.

(5) (i) மண்டாவல, மாஹேன, இல. 130/2 பீ யில் வதியும் திரு. ஐ.பி. சோமதிலகவினது 2025.04.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கணேமுல்ல, கெந்தலியத்த பாலுவ, இல. 177/3 இல் வதியும் திரு. டப்ளியூ.டி. மஹேந்திர உதய குமாரவினது 2025.03.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க சமர்ப்பித்தார்.

(6) (i) குருவிட்ட, உடகட வத்த, இல. 676/ஈ யில் வதியும் திரு. எஸ். நலீன் பிரதீப் குமாரவினது 2025.06.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) குருவிட்ட, வத்து யாய, ஸ்ரீ சுமன வித்தியால வீதி எனும் முகவரியில் வதியும் திரு. ரீ.பீ.ஜி. பிரியந்தவினது 2025.06.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சாந்த பத்ம குமார சுபசிங்ஹ சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஓகத்து 15 ஆம் திகதிய 2449/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.09.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக..

(மு.ப 11.34 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 2.18 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்குவாராக" என கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.11 மணிக்கு கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. ஒத்திவைப்பு (உத்தேச மின் கட்டணத்தைக் குறைத்தல்)**: "இப் பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 5.39 மணிக்கு இன்றைய சபைத் தீர்மானத்திற்கிணங்க தலைமை தாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2025 செப்தெம்பர் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.